# தைரியம் இழக்காதீர்கள்

யாரொருவர் ஆத்ம சிந்தனையைப் புறக்கணித்து விட்டு வெறும் சமூக சேவையில் ஈடுபட்டிருப்பார்களோ, அவர்கள் தன்னுடைய வெற்றியையும் மீதும், தன்னுடைய நற்குணங்களையும் நினைத்து மயங்கி விடுவார்கள். தங்களைத் தாங்களே சமூக சேவகர் களாகப் பார்க்க ஆரம்பித்து விடுவார்கள். இந்நிலையில் அவர்கள் தாங்கள் செய்யும் காரியங்களை எல்லோரும் புகழ வேண்டுமென்றும் தாங்கள் சொல்வதை எல்லோரும் கேட்க வேண்டுமென்றும் எதிர்பார்ப்பார்கள். அவர்களிடம் பெருகி விடும் தற்பெருமை அவர்களை அநேகம் பேருக்கு எதிரியாக்கிவிடும். இதனால் அவர்களின் உலக சேவை, உண்மையான சமூக சேவையாகாமல், சமூகத்துக்கு நாசம் விளைவிக்கக் கூடியதாக மாறிவிடுகிறது.

ஆத்ம சிந்தனை செய்யாமல் மனிதனுக்குப் பணிவு வருவதில்லை. தவிர தன் தவறைத் திருத்திக் கொள்ள முனைவதில்லை. அவன் தவறு மேல் தவறாக செய்து கொண்டே போகிறான். தவிரவும் தன்னுடைய வாழ்க்கையை வேதனையுள்ளதாகச் செய்து கொள்கிறான்.

நாம் எந்த பாரத தேசத்தின் பெருமையை, பாரத தேசக்கொள்கை களைப் பிரச்சாரம் செய்ய நினைக்கி றோமோ அதனால் உங்களுடைய எல்லாக் கஷ்டங்களுக்கும் விடிவுகாலம் வரக்கூடும். அரசியல் மூலம் உங்கள் அதிகாரங்களைக் காக்க முடியும். ஆனால் எந்த இடத்தி-ருந்து நம்முடைய சுகம், துக்கம் உற்பத்தியாகிறதோ அதை ஒரு கட்டுக்குள் கொண்டுவர அரசியலால் முடியாது. ஆனால் ஆன்மீகத்தால் அது முடியும். மனிதனை மனிதனாக்கும் சக்தி பாரத பண்பாட்டில் தான் இருக் கிறது. நம் நாட்டின் பண்பாடு நமக்குக் கற்றுத் தருவது என்னவென்றால், மனிதனை மனிதன் நேசிக்கவே பிறந்து இருக்கிறான். சண்டையிட்டுச் சாவதற்கு அல்ல. நம்முடைய பணிகள் ஒழுங்கான முறையில் நடந்து கொண்டிருந்தால் பாரதப் பண்பாட்டின் சூர்யோதயம் கட்டாயம் உண்டாகும். நீங்கள், அமைதி, சாமர்த்தியம், சக்தி இவைகளை விரும் பினால் உங்கள் அந்தராத்மாவின் உதவியை நாடுங்கள். நீங்கள் உலகை ஏமாற்றலாம். ஆனால், உங்கள் மனசாட்சியை யாரும் ஏமாற்ற முடியாது.

நீங்கள் செய்யும் ஒவ்வொரு செயலுக்கும் உங்கள் மனசாட்சியின் சம்மதத்தைப் பெற்றுக்கொண்டால், விவேகமென்னும் பாதை நஷ்ட மடையாது. உலகமே உங்களிடம் விரோதம் கொண்டாலும் நீங்கள் உங்கள் மனசாட்சியின் சொற்படி நடந்து கொண்டால் யாரும் நீங்கள் வெற்றி கொள்வதைத் தடுக்க முடியாது. எப்பொழுது ஒரு மனிதன் தன்னையே உயர்வாக நினைக்கிறானோ, தவிர தான் தான் சரித்திரலேயே உயர்ந்தவன் என்று நினைக்க ஆரம்பிக்கிறானோ அப்பொழுதே அவனுடைய ஆன்மீகம் நஷ்டமடைகிறது. உன்னுடைய சொல் நல்ல விஷயங்களுக்காக இருக்க வேண்டும். ஒழுங்கான நடத்தையில் உறுதியாக இருந்து, காலத்தைக் கழிப்பது முடிந்தால் அடுத்தவர்களின் நலத்திற்காக முயற்சி உடையவனாய் இருப்பது, நியாயமான வருவாயில் ஜீவனம் செய்வது, கடவுளின் பெயர் ஜபிப்பது, தன்னுடைய கடமையே கண்ணாக இருப்பது இன்ப துன்பத்தில் மனம் தளராமல் இருப்பது என்ற விதி முறைகளைக் கடைப் பிடித்தால் வாழ்க்கை தவமாகி விடும். மனிதன் வாழ்க்கையை வெற்றி கொள்வதில் தான் புத்திசா-த் தனம் உள்ளது. எதுவரை நம்மிடம் அகங்காரம் உள்ளதோ அதுவரை நம்முள் தியாகத்தின் எண்ணம் உதயமாவது கடினம். எழுந்திருங்கள், விழித்துக் கொள்ளுங்கள் உங்கள் லட்சியத்தை அடையும் வரை நிற்காதீர்கள்.

யாராவது நமக்குக் கெடுதல் செய்தாலோ நம்மைத் தூற்றினாலோ, நாம் ஆத்திரமடையும்படி பேசினாலோ நாம் அதைச் சாதாரணமாக எடுத்துக் கொள்வதினாலும் அதற்குப் பதில் சொல்லாமல் இருப்பதினாலும் விரோதம் வளராது. நம் மனதிற்கு நாம் சொல்ல வேண்டும்: இதற்கு நல்ல பதில் நாம் மௌனமாக இருப்பது தான் என்று யார் ஒருவர் தன்னுடைய கடமையில் கண்ணாக இருந்து கொண்டும் அடுத்தவர் களிடம் குற்றத்தைத் தேடாமலும் இருக்கிறார்களோ அவர்கள் உள்ளத்தில் எப்பொழுதும் மகிழ்ச்சி நிறைந்து இருக்கும். வாழ்க்கையில் ஏற்றத் தாழ்வு வந்து கொண்டு தான் இருக்கும். சிரித்துக் கொண்டே இருங்கள். புன்னகை செய்யுங்கள்.

எந்த முகத்தில் சிரிப்போ, புன்னகையோ இல்லையோ அந்த முகம் எதற்கும் பயன் இல்லை. எந்த ஒரு மனிதன், தன் மனத்திடம் நிலைக்க வேண்டுமென்று நினைக்கிறானோ அவன் அடுத்தவர்கள் சொல்லும் யோசனையில் கோபம் கொள்ளக் கூடாது. நீ முத-ல் கற்றுக் கொள்ள வேண்டியது என்னவென்றால், இந்த உலகத்தில் சில கஷ்டங்களைப் பொறுத்துக் கொள்ள வேண்டும். பூர்வ ஜன்மங்களின் பலன் தான் நீ ஜெயிக்க முடியாமல் இருக்கிறது. எந்தச் செய-ன் அலுப்பும், பயமும், நிராசையும் இருக்கிறதோ அந்தச் செய-ன் இடத்தில் மிகவும் அதீதமான ஒரு சக்தியும் இருக்கிறது. உன் வேலையை நீ செய்து முடித்ததும் ஒரு பக்கமாக நில். உன் காரியத்தின் பலகாலச் சுழற்சியில் மிதந்து போக விடு.

உன்னால் முடிந்த கர்மங்களைச் செய். பிறகு ஆத்ம சமர்ப்பணம் செய். எந்தவிதமான நிகழ்வுகளிலும் மனதைத் தளரவிடாதே. உன்னுடைய கர்ம வினைகளின் மேல் தான் உன்னுடைய அதிகாரம் இருக்க முடியும். அடுத்தவர்களின் கர்ம வினைகளின் மேல் அல்ல. கவலைப்படாதே, ஆசை வைக்காதே, பயப்படாதே. எல்லாம் நல்லபடியாகவே நடக்கும். அனுபவம் வரும், போகும் துக்கப்படாதே. நீ திடமான சுவற்றின் மேல் நின்று கொண்டிருகிறாய். சாக்ஷாத்காரத்தை அடைந்த ஒருவன் அடுத்தவர்களிடம் குறையைக் காண மாட்டான். தவிர, தான் அதிக சக்தியுள்ள வஸ்துவிடமிருந்து மறைந்திருக்கும் காரணத்தால் அவன் சூழ்நிலையை அலட்சியப்படுத்துகிறான்.

ஒரு பைத்தியக்கார நாயிடம் எவ்வளவு ஜாக்கிரதையாக இருப்போமோ அவ்வளவு ஜாக்கிரதையாக அகங்காரத் திடமும் இருக்க வேண்டும். எப்படி நீங்கள் ஒரு விஷப்பாம்பை அல்லது விஷத்தைத் தொடமாட்டீர்களோ அதே போல் சித்துக்களிடமிருந்தும் விலகி இருங்கள். தவிர சித்துக்கள்

செய்பவர்களிடமிருந்தும் விலகி இருங்கள். நம் மனதையும் இருதயத்தின் எல்லா எண்ணங்களையும், கடவுள் பக்கம் செலுத்துங்கள். அடுத்தவர் களுடைய நம்பிக்கை அதிகமாக உங்களை அனாதரவாகவும் துக்கமாகவும் ஆக்கிவிடும். வழி காட்டுதலுக்காக உன் பக்கம் பார், அடுத்தவர் பக்கம் பார்க்காதே. உன்னுடைய சத்யம் உன்னை திடமாக்கும். உன்னுடைய உறுதி உன்னை லட்சியத்தை நோக்கி அழைத்துச் செல்லும். எது நடக்கிறதோ அது நடக்கும். உன்னைப் பற்றி என்ன சொன்னாலும் சொல்லட்டும். உனக்கு இவையெல்லாம் கானல் நீரைப் போல் ஸாரமில்லாமல் தோன்றவேண்டும். உண்மையிலேயே நீ உலகத்தைத் துறந்தவனாக இருந்தால் இந்த விஷயங்களில் எப்படி கஷ்டம் ஏற்படும்? உன்னை விமர்சித்து கொள்வதில் குறை வைத்துக் கொள்ளாதே.

அப்பொழுது தான் உண்மையான வளர்ச்சி உண்டாகும். ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும், க்ஷணத்தையும் பயன் படுத்திக் கொள்ளுங்கள். பாதை வெகு நீளம். காலம் வேகமாகப் போய்க் கொண்டிருக்கிறது. உங்களுடைய பூர்ணமான ஆத்மபலம் கொண்டு உங்கள் வேலையில் ஈடுபடுங்கள்.லட்சியத்தை அடைவீர்கள். எந்த விஷயத்திற்காகவும் உங்களை வருத்தப்படுத்திக் கொள்ளா தீர்கள். மனிதர்மேல் அல்ல கடவுளிடம் நம்பிக்கை வையுங்கள். கடவுள் உமக்கு வழிகாட்டுவார். சன்மார்க்கத்தில் அழைத்துச் செல்வார். சகிப்புத் தன்மையைப் பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். உங்களுடைய பொறுப்பு களைப் புரிந்து கொள்ளுங்கள். அடுத்தவர் களின் குற்றங்களை பார்த்து, விமர்சனம் பண்ணும் முன் தன்னிடமுள்ள பெரிய குற்றங்களை ஆராய்ந்து பாருங்கள்.

உன்னுடைய வாக்கை உன்னால் கட்டுப்படுத்த முடியவில்லையென்றால் அடுத்தவர்களுக்கு எதிராக அல்லாமல் உனக்கு எதிராக உபதேசம் செய்யவை. முத-ல் உன் வீட்டை ஒழுங்குபடுத்து. ஒழுங்குமுறை இல்லாமல் ஆத்மா னுபவம் வராது. வினயம், எளிமை, சாந்தம், பொறுமை இவைகள் தான் ஆத்மானுபவத்திற்கு முக்கியமான அங்கங்கள். ஆத்மவிருத்தியில் எப் பொழுதும் விழிப்புடன் இரு. இந்த விஷயத்தைப் புரிந்து கொண்டுவிட்டால் பெரிய ரகசியத்தை அடைந்திடுவாய். நீ உன் மனதை எப்பொழுதும் செய-ல் ஈடுபடுத்திக் கொண்டேயிருக்க வேண்டும். அதைச் சும்மா இருக்க விடாதே. பொறுப்புடன் வாழ். உனக்கு ஆத்மவ்ருத்தியெனும் பெரிய வேலை உள்ளது. ஆனால், சமயம் குறைவாக உள்ளது. நீங்கள் அசிரத் தையாக அலைந்தால் வருத்தப்பட வேண்டியிருக்கும். தவிர மிகவும் கேவலமான நிலைமை வரும்.

தைரியமும், நம்பிக்கையும் வையுங்கள். சீக்கிரமாகவே உங்களுக்கு வாழ்க்கையில் எதையும் சமாளிக்கும் திறமை வந்து விடும். உங்களுடைய பலத்தில் நில்லுங்கள். அவசியப்பட்டால் உலகம் பூராவிற்கும் சவால் விடுங்கள். அதனால் உங்களுக்கு ஒரு நஷ்டமும் வர முடியாது. எல்லோரையும் விட சந்தோஷமாக இருங்கள். அடுத்தவர்கள் லௌகீகமான செல்வத்தைத் தேடு கிறார்கள். நீங்கள் அந்தக்கரணத்தின் செல்வத்தைத் தேடுங்கள். மஹான்கள் தனியே தான் நடந்தார்கள். இந்த தனிமையின் காரணமாகத்தான் வெகு தூரம் போயிருக்கிறார்கள். தனிமை-யாக இருந்தவர்கள் தன் மூலமாகவே உலகத்தின் பெரிய வேலைகளை- யெல்லாம் முடித்திருக்கிறார்கள். அவர் விருப்பம் தான் அவர்களுக்கு ப்ராப்-தமாயிற்று. அவர்கள் உள்முகமான ஆனந்தத்தில் எப்பொழுதும் திளைத் திருந்தார்கள். அடுத்தவர்கள் தன் கஷ்டத்தைத் தீர்க்க வேண்டுமென்று ஒரு போதும் எதிர்பார்த்ததில்லை. அவர்கள் தன்னுடைய ஸ்வாதீனத்திலேயே ஆதரவு தேடிக் கொண்டார்கள். தனிமையான வாழக்கை தான் அப்பட்டமான உண்மை, ஆனால், தனிமையைக் கண்டு அஞ்சி, உள்ளம் ஒடிந்து போய், கடமையி-ருந்து உற்சாகம் குறைந்து, நம்பிக்கை இழப்பது பெரிய பாவம்.

தனிமை தான் உங்கள் அந்தரங்கத்தில் மறைந்திருக்கும் மஹா சக்திகளை வெளிப்படுத்தும் சாதனம். நீங்கள் உங்களிடமே சரணடைந்திருந்தால் நீங்கள் உங்களுடைய உன்னதமான சக்திகளைத் தேடி எடுக்க முடியும். என்று உங்களுக்கு உங்கள் கை, கால், மனம் இவற்றின் மீது நம்பிக்கை வருகிறதோ அன்றே உங்களுடைய அந்தராத்மா, சொல்லும், தடைகளை யெல்லாம் மிதித்துக் கொண்டு நீ தனியாக நட என்று. மனிதர்களின்மேல் நீங்கள் நம்பிக்கையின் விசாலமான மாளிகை கட்டி வைத்திருப்பது அது கற்பனை வானில் மிதப்பது போல் ஆகும். இவைகள் நிலையில்லாததும், சாரமற்ற துமான வெறுமைகள். நம்முடைய நம்பிக் கையை அடுத்தவர்களிடம் சேர்த்து விடுவதால் நாமே நம்முடைய நிஜத் தன்மையை பரிகசித்து நம்முடைய வீரத்தை முடமாக்குதல் போல் ஆகும். எந்த ஒரு மனிதன் அடுத்தவர்கள் உதவியில் வாழ்க்கைப் பயணம் செய்கிறானோ அவன் சீக்கிரமே தனியாக நின்று விடுவான். அடுத் தவர்களை நம் வாழ்க்கையை நடத்துபவர்வளாக ஆக்கிக்கொள்வது எப்படி என்றால் ஒரு ஆழம் காண முடியாத ப்ரவாகத்தில் நம் படகை இறக்கி விடுவது போல் ஆகும். அன்பு ஒன்று தான் மஹாசக்தி. அது ஒவ்வொரு திசையிலும் நாம் முன்னேற உதவி புறிகிறது. அன்பு இல்லாமல் யாருடைய எண்ணத்திலும் மாற்றத்தை ஏற்படுத்த முடியாது. எண்ணம் என்பது வாதப் பிரதிவாதம் பண்ண வேண்டிய சிருஷ்டி அல்ல. சிந்தனையும், நம்பிக்கையும் வெகு காலம் ஸத்ஸங்கம் பண்ணுவதால் கிடைக்கும். அதிகமான சேர்க்கையின் பலன் தான் அன்பு. இதனால் மனதில் எண்ண விசாரங்கள் மற்றும் நம்பிக்கை அன்பின் விஷயங்காளாகும்.

இப்பொழுது நாம் அடுத்தவர் மீது வெற்றி கொண்டு அவர்களை நம் எண்ணத்தின் வசமாக்க விரும்பினால், அவர்களுடைய பார்வை கோணத்தை மாற்றி நாம் சொல்வதை கேட்கும்படி செய்ய வேண்டும் என்றால், அன்பின் துணையை நாம் நாட வேண்டும். உங்களுடைய அன்பும் அனுசரணையும் நிறைந்த பேச்சுக்களைக் கேட்க உலகம் வெகு ஆவலாகக் காத்துக் கொண்டிருக்கு மென்று நம்புங்கள். நாம் மற்றவர்களை ஒரேயடியாய் நம்மைப் போலவே நம்பிக்கை, சிந்தனை, குணங்கள், நியமங்கள் இவைகளை அனுசரித்து வாழ்க்கையை நடத்த வேண்டும் என்று கட்டாயப்படுத்து கிறோம். மற்றவர் களை ஒரேயடியாய் திருத்த வேண்டு மென்று நம்முடைய பார்வையின் கோணங்களை அவர்கள் மீது பலவந்தமாகத் திணிப்பதன் மூலம் சீர்திருத்தம் ஏற்படாது. உங்கள் மனதும் சந்தோஷம் அடையாது. நாம் ஒரு குறிப்பிட்ட மனிதரை அடக்கி வைத்தால் மறைமுகமாக நமக்கு முன்னேற்றம் உண்டாகிவிடும். ஆனால், அந்த மனிதன் தான் நம் முன்னேற்றதிற்குத் தடை.

அவன் நம்மேல் கோள் சொல்லுவான், குற்றம் கண்டு பிடிப்பான், மானபங்கம் செய்வான். நாம் முன்னேறாவிட்டாலும் எதிரியை நிறுத்தி வைக்க வேண்டும் என்று நினைப்பதும் அடுத்தவர்களை நம் வீழ்ச்சிக்குக் காரணமாக நினைப்பதும் குழப்பத்திற்கு மூலகாரணமாகும். மனதில் துன்பமான எண்ணங்கள் எழும் போதெல்லாம் அதை மறப்பது தான் உத்தமம். நமக்கு பிடிக்காத விஷயத்தை மறப்பது அவசியம். மறப்பது எவ்வளவு அவசியமோ, அவ்வளவே நல்ல விஷயங்களை நினைத்துக் கொள்வதும். நீங்கள் உடலாலும், மனதாலும், நடை முறையாலும் நல்லபடியாக இருக்க வேண்டுமென்றால், நல்லன அல்லாதவை களையெல்லாம் மறந்து விடுங்கள். உங்களுக்கு வேண்டியவர்களே உங்களைப் புண்படுத்திவிட்டார்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள். உங்கள் மனதை வேதனைப் படுத்திக் வைத்திருப்பார்கள். நீங்கள் அதையே நினைத்துக் கொண்டு மனதை வருத்திக் கொண்டிருப்பீர்கள். அன்புள்ள உடன் பிறப்புகளே, வேதனை நிறைந்ததையும், பிடிக்காத விஷயங் களையும் மறந்து விடுங்கள். அந்தப்பக்கம் உங்கள் கவனத்தைச் செலுத்தாமல் நல்ல விஷயங்களில் மனதை நிலை நிறுத்துங்கள். கவலைகளி-ருந்து விடுபட தலை சிறந்த உபாயம், துன்பங்களை மறப்பது தான். சுகம், துக்கம் இவற்றுக்கு அடிமை ஆகாமல் அதன் மேல் உங்கள் ஆதிக்கத்தை நிலை நிறுத்துங்கள். தவிர அதில் ஏதாவது சிறந்தது கிடைத்தால் அதை வைத்துக் கொண்டு உங்கள் வாழ்க்கையை அனுதினமும் புதியதாக, ரசமுள்ளதாக ஆக்கிக்கொள்ளுங்கள். வாழ்க்கையை உயர்ந்ததாகச் செய்வதே மனிதனுடைய கடமையாகும். அதனால் இதை உசிதமாக நினைத்து இந்த வழியில் உன் கடமையைப் பூர்த்திச் செய்க. விரோதமானதைக் கண்டு பயப்படாதே. அனுகூலமானதை சாஸ்வதம் என்று நினைத்து உட்காராமல் இருந்தாயானால் எல்லாவற்றையும் சாதிக்க முடியும். யார் கிடைக்கிறார்களோ அவர்களின் சிக்ஷை எடுத்துக்கொண்டு வாழ்க்கையை உயர்த்திக் கொள். வாழ்க்கை எவ்வளவுக்கு எவ்வளவு உயர்ந்த தாகிறதோ அவ்வளவுக்கு அவ்வளவு இன்று விரோதமாக தெரிவதெல்லாம் அனுகூலமானதாகத் தெரிய ஆரம் பிக்கும். தவிர அனுகூலம் வந்தவுடன் துக்கம் நிவர்த்தியாகிவிடும். நான் சொல்வதை யாரும் கேட்பதில்லை என்று சொல்-ச் சொல்-யே நீ களைத்துவிட்டாய். ஆனால், கேட்க வேண்டியவர்கள் யாரும் கேட்பதில்லை, அதாவது அவர்கள் மீது எந்த விதமான பாதிப்பும் இல்லை.

என்னைக்கேட்டால் கேட்பவர் களை விட அதிகமான தப்பு சொல்பவர்களிடம்தான் இருக்கிறது. சொல்பவர்களுக்குச் செய்யத் தெரிவ தில்லை. அவர்கள் தன்னுள் நோக்க வேண்டும். நம் ஆத்மாவை சோதித்தால் அது கார்யங்களின் வெறுமையைக் காட்டிவிடும். வாக்கின் வெற்றிக்கு பக்கபலம் செயல் திறமையில் தான் இருக்கிறது. நீங்கள் கொஞ்சமாகப் பேசினாலும் அல்லது பேசாமலே இருந்தாலும் உங்களுடைய கடமையில் கண்ணாக இருங்கள். கொஞ்ச நாட்களில் எல்லோரும் நீங்கள் சொல்லாமயே உங்கள் பக்கம் இழுக்கப்பட்டு வருவதை உணர்வீர்கள்.

குறைவாகப் பேசுங்கள், அதிகமாக செயல்படுங்கள். சொல்-ன் ப்ரபாவம் ஒரு க்ஷணம் தான் செயல்களின் ப்ரபாவம் நிரந்தரமானது. தைர்யம் நம்மை அழைக்கிறது. காலம் யுகம், கடமை, பொறுப்பு, விவேகம், வீரம் இவை நம்மை அழைக்கின்றன. இந்த அறைகூவலை அலட்சியப் படுத்தக் கூடாது. ஆத்மாவை நிர்மாணிக்க நாம் முட்கள் நிறைந்த பாதைகளை வரவேற்று முன்னேறிச் செல்வோம். மற்றவர்கள் என்ன சொல்கிறார்கள், என்ன செய்கி றார்கள் என்று கவலைப்படாதீர்கள். நம்முடைய ஆத்மா நமக்கு வழிகாட்டுவதற்குக் கிடைத்திருக்கிறது. எல்லோரும் இருட்டில் அலைகிறார்கள். அலைந்து கொண்டும் இருப்பார்கள். நாம் நம்முடைய விவேகம் எனும் ஒளியை உபயோகப்படுத்திக் கொண்டு முன்னோக்கிச் செல்வோம். யார் பகைக்கிறார்கள், யார் ஆதரவாயிருக்கி றார்கள் இதை கணிக்கிறது நம்முடைய மனசாட்சி. தைரியம் நம்முடன் இருக்கிறது. விழிப்புணர்வுடைய மனிதனுக்கு எது முடியுமோ, எது உபயோகமோ அதையே செய்வோம். ஒரு சீர்திருத்தவாதியின் தத்துவ நிலை பரிஹாசத்திற்கு உரியது. தருமம், ஆன்மீகம், சமூகம் தவிர அரசியல் இவற்றில், சீர்திருத்தம், வளர்ச்சி என்ற கோஷம் இடுகிறார்கள். ஆனால் அதில் சொல்லுக்கும், செயலுக்கும் நடுவில் வானத்துக்கும், பூமிக்கும் உள்ள இடைவெளியைப் பார்க்கலாம். இந்த நிலையில் ஒளி பொருந்திய எதிர் காலத்தில் நம்பிக்கை புகைபடிந்து போய் கொண்டிருக்கிறது. நாம் எல்லாம் இது போன்ற காலத்தை எதிர் நோக்கிக் கைகட்டிக் கொண்டு உட்கார்ந்திருப்பதா? நாம் நம்மை அனாதரவாக, கையாலாகாதவர்களாக உணர்ந்து காலத்தை மாற்றுவதற்காக வேறு ஒருவரை நம்பிக் கொண்டு உட்கார்ந்திருப்பதா? மனிதனின் வீரம் சொல்கிறது, இது போல் நடக்கக் கூடாது என்று பேராசை, மோகம், பெயர், புகழ், கௌரவம் என்ற புயல் மனிதனை நீண்ட வழியில் போகக் கட்டாயப்படுத்தி விடுகிறது. பிறகு எங்கிருந்து எங்கோ இழுத்துச் செல்கிறது. நம்மையும் இழுத்துப் போயிருக்கும். இது சாமான்ய மனிதர் களைத்தான் இழுத்துச் செல்லும். நிறைய மனிதர்கள் லட்சியப் பாதையில் அலைந்து திரிந்து எங்கிருந்து எங்கோ போய்ச் சேர்ந்தார்கள். நீங்கள் வழிதவறிப் போகாதீர்கள். உங்களுக்கு எப்பொழுதாவது வழி தவறும்படி நேர்ந்தால், உங்கள் உள்ளுணர்வில் நம்பிக்கை முளை விட்டிருந்த தருணத்தின் மன நிலையை நினைவு கூறுங்கள். அந்த நிகழ்ச்சியை நினைவு வைத்துக் கொள்ளுங்கள். உழைப்பதில் தான் நாம் உற்சாகம் கொள்ள வேண்டும்.

மனதிற்குள் முனைப்பு இருந்தால், அது நூறு மடங்கு வேலையை வாங்கிக் கொள்கிறது. இவ்வளவு கட்டுரை எழுதுவது, இவ்வளவு நிர்வாகத்தை அமைப்பது, இவ்வளவு பெரிய புரட்சியும், இவ்வளவு ஆசிரமம் அமைப்பதற்கான வேலையை மேற் கொண்டுள்ளது. இதெல்லாம் எப்படி நடக்கிறது? ஈடுபாடும், உழைப்பும் இருப்பதால் தான். நாம் உழைப்பதைப் புறக்கணித்தால் கீழ்மட்டமான ஒரு மனிதனாக ஆகி வயிற்றைக் கழுவுவது கூட கஷ்டமாகிவிடும். திருடுதல், ஏமாற்றுதல் தந்திரத்தாலும் வயிற்றை நிரப்புதல், ஆடைகள் உடுத்திட, சுகங்களை அனுபவிக்கவும், சந்தோஷப் படுவதற்காகவும் செல்வத்தைச் சேர்த்து கொண்டேயிருப்பான். இந்த விதத்தில் நாம் அரிய செயல் எதுவும் செய்ய முடியாமல் போய்விடும். அடுத்தவர்களின் குற்றத்தைப் பார்க்கும் முன் நம்மிடமுள்ள குற்றங்களைப் பாருங்கள் அடுத்தவர்களிடம் உள்ள கெடுதலைப் பார்க்கும் முன் உங்களிடமுள்ள கெடுதல்களை ஆராய்ந்து பாருங்கள். அடுத்தவர்களுக்குக் கெடுதல் பண்ணும் முன்

நம்மிடம் ஏதும் கெடுதல் இல்லையே என்று பார்த்துக் கொள்ளுங்கள். அப்படி கெடுதல் இருந்தால் அதை அகற்றுங்கள். அடுத்தவர்களை நிந்திக்கும் காலத்தை உங்கள் ஆத்மவ்ருத்தியை வளர்த்துக் கொள்வதில் செலவிடுங்கள். அப்பொழுது தான் அடுத்தவர்களை நிந்திப்பதால் வளரும் வெறுப்பை தியாகம் செய்து விட்டு பரமானந்தத்தின் பக்கம் போய்க் கொண்டிருக்கிறீர்கள் என்பதை ஒத்துக் கொள்ளுவீர்கள். உலகத்தை ஜெயிக்க நினைக்கும் மனிதர்களே முத-ல் உங்களையே ஜெயிக்க முயற்சி செய்யுங்கள். இதை நீங்கள் செய்ய முடிந்தால் உலகை ஜெயித்தவனாக ஆக வேண்டும் என்ற உங்கள் கனவு பூர்த்தியாகும். நீங்கள் இந்திரியங்களை ஜெயித்தவனாக ஆகும் போது உலகத்தில் உள்ள எல்லா பிராணியையும் நம் வழியில் நடத்த முடியும். உலகின் எந்த உயிரும் உனக்கு விரோதியாக இருக்காது. என்ன செய்வது, சூழ்நிலை நமக்கு அனு கூலமாக இல்லை. யாரும் நமக்கு உதவி செய்ய மாட்டார்கள். எங்களுக்கு சந்தர்ப்பம் கிடைக்கவில்லை என்றெல்லாம் புகார் செய்வதில் அர்த்தமில்லை.

இது மாதிரிப் பேச்செல்லாம் உங்கள் மனதை சமாதானப்படுத்து வதற்காக பேசப்படுகிறது. எல்லோரும் சில சமயம் ப்ராப்தம் என்று ஒத்துக் கொள்கிறார்கள். சில சமயம் தெய்வங்கள் முன்னால் மண்டியிடுகிறார்கள். இதற்கு எல்லாம் காரணம் தங்கள் மேலேயே நம்பிக்கை இல்லாதது தான். அடுத்தவர்கள் சுகமாயிருப்பதைப் பார்த்து கடவுளின் நியாயத்தைச் சுட்டிக்காட்ட ஆரம்பிக்கி றார்கள். எந்த உழைப்பினால், பிறர் தங்கள் வேலையை முடிக்கிறார்களோ, அந்த உழைப்பு தன்னிடம் இருக்கிறதா என்று பார்ப்பதில்லை. கடவுள் யாரையும் வஞ்சிப்பதில்லை அவர் ஆத்மசக்தியை எல்லோருக்கும் சமமாகச் கொடுத்து இருக்கிறார். அதன் ஆதாரத்தில் தான் முன்னேற்றம் காணமுடியும். உங்கள் விஷயத்தை நீங்கள் போடும் திட்டம், உங்கள் தீர்மானம் இதைப் பற்றி அடுத்தவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்று நீங்கள் பார்க்கத்தேவை இல்லை. அவர்கள், உங்களை கற்பனையின் பின்னால் ஒடும் பித்தர் என்றும் கனவு காண்பவன் ஏ்னறுச் சொன்னால் அதை கவனிக்காதீர்கள்.

நீ உன்னுடைய தோற்றத்தின் மேல் நம்பிக்கை வை. அடுத்தவர்கள் சொல்வதாலோ, தடைகள் வருவதாலோ மனத்தில் நம்பிக்கையை இழக்காதீர்கள், நம்பிக்கையை நிரந்தரமாக வைத்துக் கொண்டு முன்னேறிச் சென்றீர்க ளானால், சீக்கிரமாகவோ அல்லது நேரம் கடந்தோ உலகம் உங்களுக்கு வழி விடும். அடுத்ததாக முன்னேற்றத்தின் முயற்சி இருந்து கொண்டே இருக்கட்டும். ஆனால், அதை ஒரு விளையாடுபவனாக எண்ணம் கொண்டு செயல் பட வேண்டும். புத்திசா-த்-தனமும் சமயோஜிதமும் அழுத்திச் சொல்வது என்னவென்றால் உலகச் சக்கரம் மாறும் போது அதற்குத் தகுந்தாற்போல் மன நிலையைத் தயாராக வைத்துக் கொள்ள வேண்டும் என்று. லாபம், சுகம், வெற்றி, முன்னேற்றம், பாராட்டு இதெல்லாம் கிடைத்தவுடன் அகங்காரம் கொண்டு கொக்கரிக்காதீர்கள். அதற்கு அவசியம் இல்லை. எதுவரை இது நீடிக்கும் என்று சொல்ல முடியாது. இந்த நிலையில், அழுது, புரண்டு நம்பிக்கை யிழப்பதும், காலத்தை வீணாக்குவதும் வீண். நம்முடைய சக்தியை நஷ்டமாக்குவது வீண். மாறுதலுக்குப் பதிலாக நம்மை பக்குவப்படுவதும், மன அழுத்தத்தை போக்குவதற்கு யோசிப்பதில் விடை காண்பது, கையோடு கை சேர்த்து சமாளிப்பதில் அறிவை உபயோகிப்பது, அழுது மண்டையை பிய்த்துக் கொள்வதை விட சிறந்ததாகும். எது கிடைக்கிறதோ அதில் திருப்தியடைந்து சந்தோஷம் நிறைந்த சுற்றுச் சூழலை அமைத்துக் கொள்ளுவதில் தான் புத்திசா-த்தனம் இருக்கிறது. ஒரே சமயத்தில் நிறைய செயல்களை இழுத்து போட்டுக் கொள்ளும் எண்ணம் வைத்தால் ஒரு வேலையும் பூர்த்தியாகாது. அரை குறையாக ஒரு செயலை விட்டு அடுத்த செயலை செய்ய மனம் விரையும். இங்கு தான் கஷ்ட காலம், சேதம் ஆரம்பமாகும். தவிர மனதில் வெறுப்பு உண்டாகும். செயல்களை சீர்தூக்கிப் பார்ப்பதால் களைப்பு, காலவிரயம் ஆகாது. தவிர மனிதன் வெற்றிப் படிகள் மீது ஏறிப் போய்க் கொண்டேயிருப்பான். எந்த வேலை செய்தாலும் மனதிற்குள் உயர்ந்த எண்ணங்கொண்டு அதில் ஆழ்ந்து செய்வதுதான் உலக வாழ்க்கையின் வெற்றிக்கு மூல மந்திரம் ஆகும். நாம் எங்கு இருந்துகொண்டு இருக்கிறோமோ அந்தச் சூழ்நிலையை மாற்ற முடியாது. ஆனால், அதற்கு பதிலாக நாம் நம்மை மாற்றிக் கொண்டு அந்த நிலையில் சந்தோஷம் அனுபவிக்கலாம். அடுத்தவர் களனைவரும் நம்மைப் போல் இருக்க வேண்டும். நம் சொற்படி நடக்க வேண்டும் என பிடிவாதம் செய்வது, எதிர்பார்ப்பது, குழப்பங்களில் மாட்டிக் கொள்ள முக்கியமான காரணமாகும். இவைகளி-ந்து விடுபட வேண்டு-மென்றால் நாம் மௌனமாக, அமைதியாக நம் வேலையைச் செய்து கொண்டே போக வேண்டும். அடுத்தவர்களை அவர்கள் வழியில் போக விடுங்கள். எந்த ஒரு மனிதரையும் அடக்கப் பார்க்காதீர்கள். அதல்லாமல் மற்றவர்களைச் சந்தோஷப் படுத்தும் எண்ணங்கொண்டு உங்கள் விலை மதிக்க முடியாத சக்தியை வீணாக்காதீர்கள். எல்லோரும் நம் சொல்படி நடக்க வேண்டும். நம்மிடம் மதிப்புக் கொண்டு நமக்கு உதவவேண்டும் என்று நினைப்பதில் அர்த்தமில்லை. இது தவறான விருப்பமும் கேடு விளை விக்கும் விருப்பமுமாகும். அடுத்தவர் களிடம் நம் எண்ணங்களைத்திணிப்பது உகந்ததல்ல. எப்பொழுதும் பரபரப்பாக இருப்பது, அவசரப்படுவது இரவும், பகலும் வேலைகளில் ஆழ்ந்திருப்பது, உழைப்பது, ஒவ்வொரு நொடியையும், நிமிடத்தையும், வேலையால் திணிப்பதால் மன அழுத்தம் உண்டாகும். அதனால் நம் வாழ்க்கையின் விதி முறைகளை தினப்படி நம் வாழ்வில் நடத்தும் வேலைகளை அறிவு பூர்வமாக நடத்துங்கள். நேர்மை, விதிமுறைகளை அனுசரிப்பது, கௌரவம் நல்ல நடத்தை இவற்றால் நிறைந்த எளிய வாழ்க்கை வாழ்வதால் மனதின் சக்தி நல்ல விதத்தில் உபயோகமாகிறது. கடவுளால் கொடுக்கப் பட்ட இந்த சந்தர்ப்பத்தில், நல்லவிதமான லாபம் கிடைக்க வழிவகுக்கிறது. கடமையை நிறைவேற்றுவதில் உள்ள சந்தோஷத்தைப் பெறுங்கள். தடைகளைக் கண்டு பயப்படாமல் எதிர்த்து நில்லுங்கள். இவை தான் தர்மத்தின் சாரத்தின் தத்துவம். உலகத்தில் எத்தனையோ மஹான்கள் பண்பாளராக, கருணை நிறைந்தவர்களாக இருந்திருக்கிறார்கள்.

அவர்கள் தம் தீர்க்கதரிசனத்தை இழக்கவில்லை. அவநம்பிக்கையை அருகில் வரவிடவில்லை. மனத்தில் நம்பிக்கையின் பலத்தில் ஒவ்வொரு அடியாக முன்னேறினார்கள். தனக்கு எதிராக உள்ள சூழ்நிலையிலும் அவர்கள் லட்சியத்தை விட்டு பிறழவில்லை. சாதனங்களும், தகுதியும் குறைந்திருந்த போதும், தேசம், தர்மம், சமூகம் மனிதனின் சேவையில் தங்களுடைய வாழ்க்கையை அர்ப்பணம் செய்து சமூகத்தின் முன்னால் ஓர் உதாரணமாக இருந்து காட்டி கோடி கோடியான ஜனங்களுக்கு வழிகாட்டிச் சென்றார்கள். நம்முடைய

குற்றங்களை அடுத்தவர்கள் மீது சுமத்துவதால் ஒரு வேலையும் நடக்காது. நம்முடைய மன மாற்றம், உடல் பலவீனத்திற்கு மற்றவர் பொறுப்பல்ல. அதற்கு நாம் பொறுப்பு. பிற மனிதர்கள், சூழ்நிலை, நம்முடைய ப்ராப்தம் இவைகளின் தாக்கமும் உண்டு. மூன்றில் ஒரு பங்கு வாழ்க்கை, நம்முடைய இன்றைய பார்வை, கடமையின் ப்ராப்தி பலன் தான். நம்முடைய மனக்கஷ்டங்கள், உடல் கஷ்டங்கள் நாம் நம்மைத் திருத்திக் கொள்ளும் வேலையைத் தொடங்கினாலே சுலபமாக தீர்ந்துவிடும். யாரொருவர் இஷ்டத்திற்கு உளறிக் கொண்டு, தான் அதன்படி நடக்காமல் இருக்கிறார்களோ, அவர்கள் பேச்சுக்கு மதிப்பு இல்லை. யாரொருவர் சிந்தனையாலும், நடத்தை யாலும் சமமாக அவர்கள் வாழ்க்கையில் தரமமாக செய்கிறார்களோ, அவர்களின் சேவையும், சாதனையும் எப்பொழுதும் பூத்தும், பழுத்தும் இருக்கிறது.